**தேதி - 09.04.2026.**

**Probate. OP.146/2023**

**எ.ம.சா.1 - திருமதி.கே.எம்.அபர்ணா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை**

இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள உயிலை நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகு பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணத்தில் ம.சாஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கையெழுத்து என்னுடைய தகப்பனார் மகேஸ்வரனுடைய கையெழுத்து என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர் மனுவில் மேற்படி கையெழுத்து என்னுடைய தகப்பனாருடைய கையெழுத்து என்று மறுக்கவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு மறுக்கவில்லை. அமர்நாத் மற்றும் பிரேம்நாத் என்பவர்களை எங்களுக்கு தெரியும். எங்களுடைய தாத்தா காலத்தில் இருந்து அவர்களுடைய அப்பா கிருஷ்ணமாச்சாரி எங்கள் குடும்பத்திற்கு ஆடிட் பார்த்து வருகிறார். என் தகப்பனாருக்கு அமர்நாத் மற்றும் பிரேம்நாத் ஆடிட் பார்த்து வந்தார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN

Digitally signed by MUTHUKUMARAN
Date: 2026.04.09 19:14:23 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.